<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 32/2014</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **21.11.2025** |
| **பெயர்** | **இராதாகிருஷ்ணன்** |
| **த/பெ** | **சாமிகண்ணன்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.33.எ.எம்**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. எனது ஊரில் என்னை இராதா என்று தான் அழைப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு கூலி ஜீவனம் தான் என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக நிலம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. சாமிநாதமுதலி, இராமலிங்கமுதலி ஆகியோர்களை தெரியுமா என்றா'ல தெரியும். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்தே அவர்களிடம் தான் பணியாளராக இருந்தேன். அவர்கள் குடும்பத்தில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. எனக்கு தற்போது வயது 58. எத்தனை வருடம் காலத்திற்கு அவர்களிடம் வேலை பார்க்கவில்லை என்றால் சுமார் 20 வருட காலத்திற்கு பார்க்கவில்லை.

2. அதனால் யார், யார் நிலம் யார், யாருக்கு பாகம் பிரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சர்வே எண் தெரியாது இராமலிங்க முதலியார் அவர் நிலத்தில் பயிர் செய்கிறார், சாமிநாதமுதலியார் அவர் நிலத்தில் பயிர் செய்கிறார் சாட்சியிடம் அவரின் பிரமாணவாக்குமூலம் காண்பிக்கப்பட்டு அதில் உள்ள விவரம் தெரியுமா என்று கேட்ட போது படிப்பு அறிவு இல்லாத காரணத்தினால் அதில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்று கூறினாரல். என்னை யார் சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் 1ம் வாதியான பழனி அழைத்ததன் பெயரில் வந்துள்ளேன் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. யார், யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் பழனி மீது இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை முடியும் நேரம். 11.40.p.m.**